# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## எட்டாம் திருவாய்மொழி - அணைவது
## எம்பெருமானது மோக்ஷமளிக்கும் தன்மையை உலகத்தார்க்கு உபதேசித்தல்

** அணைவது அரவணை மேல் * பூம்பாவை ஆகம்
புணர்வது * இருவர் அவர் முதலும் தானே **
இணைவனாம் எப்பொருட்கும் * வீடு முதலாம் *
புணைவன் * பிறவிக் கடல் நீந்துவார்க்கே 1

நீந்தும் துயர்ப் பிறவி * உட்பட மற்று எவ்வெவையும் *
நீந்தும் துயர் இல்லா * வீடு முதலாம் **
பூந்தண் புனல் பொய்கை * யானை இடர் கடிந்த *
பூந்தண் துழாய் என் * தனி நாயகன் புணர்ப்பே 2

புணர்க்கும் அயனாம் * அழிக்கும் அரனாம் *
புணர்த்த தன் உந்தியோடு * ஆகத்து மன்னி **
புணர்த்த திரு ஆகித் * தன் மார்வில் தான் சேர் *
புணர்ப்பன் பெரும் புணர்ப்பு * எங்கும் புலனே 3

புலன் ஐந்து மேயும் * பொறி ஐந்து நீங்கி *
நலம் அந்தம் இல்லதோர் * நாடு புகுவீர் **
அலமந்து வீய * அசுரரைச் செற்றான் *
பலமுந்து சீரில் * படிமின் ஓவாதே 4

ஓவாத் துயர்ப் பிறவி * உட்பட மற்று எவ்வெவையும் *
மூவாத் தனி முதலாய் * மூவுலகும் காவலோன் **
மாவாகி ஆமையாய் * மீனாகி மானிடமாம் *
தேவாதி தேவ பெருமான் * என் தீர்த்தனே 5

தீர்த்தன் உலகளந்த * சேவடி மேல் பூந்தாமம் *
சேர்த்தி அவையே * சிவன் முடி மேல் தான் கண்டு **
பார்த்தன் தெளிந்து ஒழிந்த * பைந்துழாயான் பெருமை *
பேர்த்தும் ஒருவரால் * பேசக் கிடந்ததே? 6

கிடந்து இருந்து நின்று அளந்து * கேழலாய்க் கீழ் புக்கு
இடந்திடும் * தன்னுள் கரக்கும் உமிழும் **
தடம் பெருந்தோள் ஆரத் தழுவும் * பார் என்னும்
மடந்தையை * மால் செய்கின்ற மால் * ஆர் காண்பாரே? 7

காண்பார் ஆர்? எம் ஈசன் * கண்ணனை என் காணும் ஆறு? *
ஊண் பேசில் எல்லா உலகும் ஓர் * துற்று ஆற்றா **
சேண்பால வீடோ * உயிரோ மற்று எப்பொருட்கும் *
ஏண்பாலும் சோரான் * பரந்து உளனாம் எங்குமே 8

எங்கும் உளன் கண்ணன் என்ற * மகனைக் காய்ந்து *
இங்கு இல்லையால் என்று * இரணியன் தூண் புடைப்ப **
அங்கு அப்பொழுதே * அவன் வீயத் தோன்றிய * என்
சிங்கப் பிரான் பெருமை * ஆராயும் சீர்மைத்தே? 9

சீர்மை கொள் வீடு * சுவர்க்க நரகு ஈறா *
ஈர்மை கொள் தேவர் * நடுவா மற்று எப்பொருட்கும் **
வேர் முதலாய் வித்தாய்ப் * பரந்து தனி நின்ற *
கார் முகில் போல் வண்ணன் * என் கண்ணனை நான் கண்டேனே 10

** கண் தலங்கள் செய்ய * கருமேனி அம்மானை *
வண்டு அலம்பும் சோலை * வழுதி வள நாடன் **
பண் தலையில் சொன்ன தமிழ் * ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
விண் தலையில் வீற்றிருந்து ஆள்வர் * எம்மா வீடே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---